©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை : ரூ. 20.00 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 179A] சென்னை, திங்கட்கிழமை, ஜூலை 20, 2009
ஆடி 4, திருவள்ளுவர் ஆண்டு — 2040

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

### பொருளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| **சட்டமுன்வடிவுகள்:** | |
| எண் 25/2009—தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் .. | 2–3 |
| எண் 26/2009—தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வைச் சட்டம் .. .. | 5–10 |
| எண் 27/2009—தமிழ்நாடு தொழில் நடைமுறையை எளிதாக்குதல் சட்டம் .. .. .. .. .. | 11–23 |
| எண் 28/2009—தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. | 25–28 |
| எண் 29/2009—தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. | 29–31 |
| எண் 30/2009—தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. | 33–36 |
| எண் 31/2009—தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) திருத்தச் சட்டம் .. | 37–38 |
| எண் 32/2009—தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (நான்காம் திருத்தச்) சட்டம் .. .. .. .. .. | 39–45 |
| எண் 33/2009—தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. .. | 47–49 |

**2009 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது:—**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2009**

***1951–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

**1.** (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2009–ஆம் ஆண்டு மே திங்கள் 29–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**2.** 1951–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் 3–ஆம் பிரிவில், ‘‘முதலமைச்சர்’’ என்னும் சொல்லானது வருகின்ற மூன்று இடங்களிலும், அதற்குப் பதிலாக ‘‘முதலமைச்சர், துணை முதலமைச்சர்’’ என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் XX/1951.

**நோக்க–காரண விளக்கவுரை**

பொது (சிறப்பு.B) துறையின் 29–05–2009 எனும் தேதியிட்ட அரசாணை நிலை எண் 467–ல், மேதகு ஆளுநர் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரான திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை துணை முதலமைச்சராக, உடனடியாக செயல் விளைவு கொள்ளும் வகையில் நியமித்துள்ளார்கள். மேற்சொன்ன அரசாணையில் துணை முதலமைச்சர் நியமிக்கப்பட்டதன் விளைவாக, 1951–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XX/1951) 3–ஆம் பிரிவில், “துணை முதலமைச்சர்” என்னும் சொற்றொடரைச் சேர்க்கும் வகையில் மேற்சொன்ன சட்டத்தின் 3–ஆம் பிரிவைத் திருத்துவதெனக் கருதப்படுகிறது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன கருத்துருவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு. கருணாநிதி,**
*முதலமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது:—**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2009**

***தமிழ்நாடு மாநிலத்திலுள்ள நகராட்சிப் பகுதிகளில் சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வையை விதித்தல் மற்றும் வசூலித்தல் குறித்து வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம், 2009—ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வைச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி:— பொருள் வரையறைகள்.

(1) "அரசு" என்றால் மாநில அரசு எனப் பொருள்படும்;

(2) "நகராட்சிப் பகுதி" என்றால் நகராட்சியொன்றின் ஆட்சிப் பகுதி எனப் பொருள்படும்;

(3) "நகராட்சி" என்றால்—

(a) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதனின் கீழும் அமைத்துருவாக்கப்படும் மாநகராட்சி எதுவும்; அல்லது

தமிழ்நாடு சட்டம் V/1920. (b) 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட "நகராட்சி மன்றமொன்று",

எனப் பொருள்படும்.

**3.** ஒவ்வொரு நகராட்சிப் பகுதியிலும் சொத்துரிமை மாற்றங்களின் மீது,— சொத்துரிமை மாற்றங்களின் மீது தீர்வை விதித்தல்.

(a) நகராட்சிப் பகுதியின் எல்லைகளுக்குள் அமைந்துள்ள அசையாச் சொத்து தொடர்பாக கீழே விவரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆவணத்தின் மீதும் தமிழ்நாடு மாநிலத்தில் அப்போதைக்கு நடைமுறையிலுள்ளவாறான (இதன் பின்பு முத்திரைச் மையச் சட்டம் II/1899. சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1899—ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படுகின்றவாறான தீர்வை மீது மேல்வரி என்பதான வடிவத்தில்;

(b) அத்தகைய ஆவணம் ஒவ்வொன்றிற்கும் எதிராகக் கீழே குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான தொகையின் மீது, அரசால், நூற்றுக்கு ஐந்து விழுக்காட்டிற்கு மேற்படாத வகையில், நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய வீதத்தில்,

தீர்வை விதிக்கப்படுதல் வேண்டும்:—

| *ஆவணத்தின் விவரிப்பு* | *தீர்வை விதிக்கப்பட வேண்டிய தொகை* |
|---|---|
| *(1)* | *(2)* |
| (i) அசையாச் சொத்து விற்பனை | ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் நிலவர மதிப்பு; மற்றும் நிலவர மதிப்பானது முத்திரைச் சட்டத்தின் 47–A எனும் பிரிவின்படி அதிகார அமைப்பு எதனாலும் இறுதியாக தீர்மானிக்கப்படுகின்றவிடத்து அத்தகைய அதிகார அமைப்பினால் தீர்மானிக்கப்பட்டவாறான நிலவர மதிப்பு. |
| (ii) அசையாச் சொத்துப் பரிமாற்றம் | ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் நிலவர மதிப்பின் அதிகப்படியான மதிப்பு; மற்றும் நிலவர மதிப்பானது முத்திரைச் சட்டத்தின் 47–A எனும் பிரிவின்படி அதிகார அமைப்பு எதனாலும் இறுதியாக தீர்மானிக்கப்படுகின்றவிடத்து அத்தகைய அதிகார அமைப்பினால் தீர்மானிக்கப்பட்டவாறான நிலவர மதிப்பு. |
| (iii) அசையாச் சொத்து கொடை | ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் நிலவர மதிப்பு; மற்றும் நிலவர மதிப்பானது முத்திரைச் சட்டத்தின் 47–A எனும் பிரிவின்படி அதிகார அமைப்பு எதனாலும் இறுதியாக தீர்மானிக்கப்படுகின்றவிடத்து அத்தகைய அதிகார அமைப்பினால் தீர்மானிக்கப்பட்டவாறான நிலவர மதிப்பு. |
| (iv) அசையாச் சொத்தின் உடைமை உரிமையுடன் அடைமானம். | ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, அடைமானத்தின்மூலம் பெறப்படும் தொகை. |
| (v) அசையாச் சொத்தின் நிலைக் குத்தகை. | ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, முதல் ஐம்பது ஆண்டுகளுக்கான குத்தகை தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய அல்லது வழங்கப்படவேண்டிய மொத்த தொகையின் அல்லது வாடகையின் மதிப்பின் ஆறில் ஒரு பங்கிற்குச் சமமானதொரு தொகை. |

முத்திரைச் சட்டத்தின் ஒரு சில வகை முறைகளின் பொருந்துகை.

**4.** (a) முத்திரைச் சட்டத்தின் **27–**ஆம் பிரிவானது, நகராட்சிப் பகுதி ஒன்றின் எல்லைகளுக்குள்ளாகவும் அத்தகைய எல்லைகளுக்கு வெளியேயும் அமைந்துள்ள சொத்தினைப் பொறுத்த அளவில், அத்தகைய சொத்துக்கள் குறித்து தனியாக விவரங்கள் திட்டவட்டமாக விவரிக்கப்படுதல் வேண்டுமெனப் பொருள்படுவதாகப் படிக்கப்படுதல் வேண்டும்;

(b) முத்திரைச் சட்டத்தின் **64–**ஆம் பிரிவானது தொடர்புடைய நகராட்சியையும், அரசினையும் குறிப்பதெனப் பொருள்படுவதாக படிக்கப்படுதல் வேண்டும்.

**5.** நகராட்சிப் பகுதியொன்றுக்குள்ளாக அமைந்துள்ள சொத்து எதனையும் பொறுத்த அளவில் இந்தச் சட்டத்தின்கீழ் வசூலிக்கப்படும் சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வையின் நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு என்ற அளவிலான தொகையானது, அத்தகைய சொத்து அமைந்துள்ள ஆட்சிப் பகுதியில் உள்ள நகராட்சியின் நிதியில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் மீதமுள்ள நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு என்ற அளவிலான தொகையானது, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் (இதன் பின்பு நிதி எனக் குறிப்பிடப்படுவதான) தமிழ்நாடு நகர்ப்புரச் சாலை கட்டமைப்பு நிதியில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்: சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வையினை பிரித்தளித்தல்.

**வரம்புரை:**

ஆனால், பேரூராட்சிப் பகுதியொன்றில் அமைந்துள்ள சொத்து எதனையும் பொறுத்த அளவில், இந்தச் சட்டத்தின்கீழ் வசூலிக்கப்படும் சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வை அத்தகைய சொத்து அமைந்துள்ள ஆட்சிப் பகுதியில் உள்ள பேரூராட்சியின் நிதியில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

**6.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்பாடு ஏதேனும் எழுமானால் அரசானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதனவாயிராத வகையில் அந்த இடர்ப்பாடுகளை நீக்குவதற்குத் தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ அதற்குத் தோன்றக்கூடிய அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்: இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**வரம்புரை:**

ஆனால், அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுக்கால அளவு முடிவுற்றதற்குப் பின்னர் செய்யப்படுதல்கூடாது.

**7.** அரசானது, நகராட்சிகளுக்கோ அல்லது பிற அதிகார அமைப்புகள் எவற்றுக்குமோ, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதற்காக, அது தக்கதெனக் கருதுகிறவாறான அத்தகைய பணிப்பாணைகளை அவ்வப்போது வழங்கலாம்; மற்றும் அத்தகைய பணிப்பாணைகளுக்கு இணங்கி நடப்பது நகராட்சிகளுக்கு அல்லது பிற அதிகார அமைப்புகளுக்குக் கடமையாக இருத்தல் வேண்டும். பணிப் பாணைகளை வழங்குவதற்கான அதிகாரம்.

**8.** (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம். விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

(2) குறிப்பாகவும், மேற்சொன்ன அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்கு ஊறின்றி அத்தகைய விதிகள்,—

(a) சொத்துரிமை மாற்றத்தின் மீதான தீர்வையை வசூலிப்பதை முறைப்படுத்துவதற்கு வகை செய்யலாம்;

(b) சொத்துரிமை மாற்றத்தின் மீதான தீர்வையை வசூலிப்பதில் அரசுக்கு ஏற்பட்ட செலவினத்தை கழித்துக்கொள்ள வகை செய்யலாம்;

(c) நிதியை நகராட்சிகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு வகை செய்யலாம்;

(d) வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்பாடு எதற்கும் வகை செய்யலாம்.

(3) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும். மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது அறிவிக்கை ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும், மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னரோ அல்லது அதனையடுத்த கூட்டத்தொடரிலோ அத்தகைய விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதியானது அல்லது ஆணையானது அல்லது அறிவிக்கையானது அதன் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும், அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறு மாறுதல் செய்வது அல்லது நடைமுறைக்கு வராமற்போனது எதுவும், அந்த விதியின் அல்லது ஆணையின் அல்லது அறிவிக்கையின்கீழ் முன்னதாகச் செய்யப்பட்டுள்ள செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

ஒரு சில சட்ட வகைமுறைகள் நீக்கம் செய்யப்படுதல்.

**9.** இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தச் சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களின் வகைமுறைகள் நீக்கம் செய்யப்பட்டதாதல் வேண்டும்.

## அட்டவணை

### (9–ஆம் பிரிவைக் காணவும்)

### பகுதி I

### 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம்

135, 136, 137 ஆகிய பிரிவுகள் நீக்கம் செய்யப்படுதல்.

1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 135, 136, 137 ஆகிய பிரிவுகள் இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு சட்டம் IV/1919.

### பகுதி II

### 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம்

164, 165, 166 ஆகிய பிரிவுகள் நீக்கம் செய்யப்படுதல்.

1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 164, 165, 166 ஆகிய பிரிவுகள் இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு சட்டம் 15/1971.

### பகுதி III

### 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம்

164, 165, 166 ஆகிய பிரிவுகள் நீக்கம் செய்யப்படுதல்.

1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 164, 165, 166 ஆகிய பிரிவுகள் இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு சட்டம் 25/1981.

### பகுதி IV

### 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்

116-A, 116-B, 116-C ஆகிய பிரிவுகள் நீக்கம் செய்யப்படுதல்.

1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 116–A, 116–B, 116-C ஆகிய பிரிவுகள் இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு சட்டம் V/1920.

**நோக்க–காரண விளக்கவுரை**

மாநிலத்திலுள்ள நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் ஆண்டொன்றுக்கு ரூ. 1000 கோடி என்ற அளவிற்கு மதிப்பிடப்பட்ட "தமிழ்நாடு நகர்ப்புறச் சாலை கட்டமைப்புத் திட்டத்தை" செயல்படுத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்குச் செலுத்தத்தக்கதாக ஒதுக்கியளிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை மீதான மேல்வரி வருவாயின் ஒரு பகுதியை உள்ளடக்கிய பல்வேறு நிதியாதாரங்களைக் கொண்டிருக்கும். மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு, நகராட்சிப் பகுதிகளில் சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வையை, முத்திரைத் தீர்வையின் மீதான மேல்வரி என்ற முறையில் விதிக்கவும் மற்றும் வசூலிக்கவும், அவ்வாறு வசூல் செய்யப்படும் தொகையில் நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு என்ற அளவிலான நிதியினை, நகராட்சி அல்லது மாநகராட்சி எதிலும் அல்லது நகராட்சி அல்லது மாநகராட்சிகளின் தொகுதியொன்றில் திட்டவட்டமான கட்டமைப்புத் திட்டம், அமைப்புத் திட்டம், செயல்முறைத் திட்டம் அல்லது திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென, தமிழ்நாடு நகர்ப்புறச் சாலை கட்டமைப்பு நிதியில் வரவு வைப்பதற்கு வகை செய்யவும் தனிச் சட்டமொன்றை இயற்றுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவின் 1 (2), 3 (b), 5, 6, 7, 8 (1) மற்றும் (2) ஆகிய கூறுகள் அவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அறிவிக்கை அல்லது ஆணை அல்லது பணிப்பாணையைப் பிறப்பிப்பதற்கோ அல்லது நேர்விற்கேற்ப விதிகளைச் செய்வதற்கோ அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யபட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது:—**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2009**

***தொழில் மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்கும் புதிய முதலீடுகளை எளிதாக்குவதற்கும், நடைமுறைத் தேவைப்பாடுகளைக் குறைப்பதன் மூலம் ஒழுங்குமுறை வரையமைப்பை எளிமைப் படுத்துவதற்கும் வகை செய்வதற்கான மற்றும் தமிழ்நாடு மாநிலத்தில் முதலீட்டாளர்களுக்கு நட்போடு கூடிய சூழலுக்கும் அதனுடன் தொடர்புடைய மற்றும் அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கும் வகைசெய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

தொழில் முனைவோருக்கு நடைமுறைத் தேவைப்பாடுகளைக் குறைத்து, தடையில்லை என்பதான அனுமதியை ஒரே முனையில் வழங்கி அவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் இம்மாநிலத்தில் தொழில் அமைப்புத் திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கும் அதற்கு இணக்கமான செயல்முறைகளை அமைத்து உறுதி செய்வதற்கும் வகை செய்வது உகந்ததாக இருப்பதால், இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின் வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** (1) இந்தச் சட்டம், 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நடைமுறையை எளிதாக்குதல் சட்டம் என்று அழைக்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்

(2) இது, அரசு அறிவிக்கை வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2.** இந்த சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி

(a) "அதிகார அமைப்பு" என்றால், மாநில அளவிலான அதிகார அமைப்பு மற்றும் மாவட்ட அளவிலான அதிகார அமைப்பு எனப் பொருள்படும் ;

(b) "நிறுமம்" என்றால், கூட்டுருமக் குழுமம் எதுவும் என்று பொருள்படும் மற்றும் ஒரு பொறுப்புக்கட்டளை, நிறுவகம், ஒரு சங்கம் அல்லது பிற தனியாட்களின் கழகம் எதனையும் உள்ளடக்கும்;

(c) "அதிகார அமைப்பு" என்றால், மாநில அரசால் நிறுவப்பட்டு, தடையில்லை என்பதான அனுமதிச் சான்றிதழ்களை வழங்குவதற்கு அல்லது அளிப்பதற்கு அதிகாரங்களை அல்லது பொறுப்பு ஒப்படைவு செய்யப்பட்டிருக்கிற ஓர் உள்ளாட்சி அதிகார அமைப்பையோ அல்லது சட்டமுறைக் குழு, மாநகராட்சி அல்லது பிற அதிகார அமைப்பை எதனையுமோ உள்ளடக்கும்;

(d) "தடையில்லை என்பதான அனுமதி" என்றால் இம்மாநிலத்தில் தொழில் அமைப்பு திட்டத்தை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்வது தொடர்பாக தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு எதனாலும் மறுப்பின்மை சான்றிதழ், ஏற்பிசைவு, அனுமதி, பதிவு, உரிமம் மற்றும் இவை போன்றவற்றை வழங்குதல் அல்லது அளித்தல் எனப் பொருள்படும் ;

(e) "மாவட்ட அளவிலான அதிகார அமைப்பு" என்றால், 6ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்படும் அதிகார அமைப்பு எனப் பொருள்படும்;

(f) "தொழில் முனைவோர்" என்றால், ஒரு தொழில் அமைப்புத் திட்டத்தில் பெரும்பான்மை அளவிலான முதலீட்டினை அல்லது கட்டுப்பாட்டினைச் செய்யும் நலனுரித்தத்தினைக் கொண்டிருக்கிற நபர் ஒருவர் அல்லது நபர்களின் அமைப்பு ஒன்று அல்லது நிறுமம் ஒன்று எனப் பொருள்படும்;

(g) "அரசு" என்றால், மாநில அரசு எனப் பொருள்படும் ;

(h) “ தொழில் அமைப்புத் திட்டம்” என்றால், உற்பத்தி அமைப்புத் திட்டங்கள், மின்சக்தி தொடர்பான அமைப்புத் திட்டங்கள், தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகள், நிதி சார்ந்த சேவைகள், மின்சக்தி, சாலைகள், இருப்பூர்திகள், நீர் வழங்கும் மற்றும் கழிவு நீரகற்றும் அமைப்புகள், கடல் துறைமுகங்கள், வானூர்தி நிலையங்கள், தொலைத் தொடர்புகள், சுரங்கம் தோண்டுதல், மருத்துவமனை தொழில், சுற்றுலாத் திட்டங்கள் தொடர்பான கட்டமைப்புத் திட்டங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கும்;

(i) “உள்ளாட்சி அதிகார அமைப்பு” என்றால்,

(*i*) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி மாநகராட்சிகள் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதனின்படியும் அமைத்துருவாக்கப்படக்கூடிய பிற மாநகராட்சி எதுவும் அல்லது

(*ii*) **1920** ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு நகராட்சி மன்றம் அல்லது

தமிழ்நாடு சட்டம் V/1920.

(*iii*) **1994** ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது ஒரு கிராம ஊராட்சி ;

தமிழ்நாடு சட்டம் 21/1994.

(j) “பெரும் தொழில் எனப் பொருள்படும் அமைப்பு” என்றால், இயந்திரத் தொகுதியிலும் இயந்திர நிலையத்திலும் செய்யப்படும் முதலீடானது பத்து கோடி ரூபாய்க்கு மேற்பட்டதாயிருக்கிற தொழில் அமைப்புத் திட்டம் எனப் பொருள்படும்;

(k) “நடுத்தரத் தொழில் அமைப்புத்திட்டம்” என்றால் இயந்திரத் தொகுதியிலும் இயந்திர நிலையத்திலும் செய்யப்படும் முதலீடு ஐந்து கோடி ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் பத்து கோடி ரூபாய்க்கு மேற்படாது உள்ள ஒரு தொழில் அமைப்புத் திட்டம் எனப் பொருள்படும்;

(l) “வகுத்துரைக்கப்பட்டது” என்றால், இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் அல்லது ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

(m) “சிறு தொழில் அமைப்புத் திட்டம்” என்றால், இயந்திரத் தொகுதியிலும் இயந்திர நிலையத்திலும் செய்யப்படும் முதலீடானது, இருபத்து ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஐந்து கோடி ரூபாய்க்கு மேற்படாமல் உள்ள தொழில் அமைப்புத் திட்டம் எனப் பொருள்படும்;

(n) “மாநில அளவிலான அதிகார அமைப்பு” என்பது **3**ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்படும் அதிகார அமைப்பு என்று பொருள்படும்.

**3**. (1) அரசானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாயிருக்கிற மாநில அளவிலான அதிகார அமைப்பை அமைத்துருவாக்குதல் வேண்டும் :—

| | | |
|---|---|---|
| (a) | அரசின் தலைமைச் செயலர் | தலைமையாளர் |
| (b) | அரசுச் செயலர், தொழில்துறை | உறுப்பினர் |
| (c) | நிலச் சீர்திருத்த ஆணையர் அல்லது இயக்குநர் | உறுப்பினர் |
| (d) | உறுப்பினர் செயலர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் | உறுப்பினர் |
| (e) | நகர்–ஊரமைப்புத் திட்ட ஆணையர் அல்லது இயக்குநர் | உறுப்பினர் |
| (f) | நகராட்சி நிர்வாக ஆணையர் அல்லது இயக்குநர் | உறுப்பினர் |
| (g) | ஊரக வளர்ச்சி ஆணையர் அல்லது இயக்குநர் | உறுப்பினர் |
| (h) | பேரூராட்சி ஆணையர் அல்லது இயக்குநர் | உறுப்பினர் |
| (i) | உறுப்பினர், பங்கீடு, தமிழ்நாடு மின்வாரியம் | உறுப்பினர் |
| (j) | தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர் | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| (k) | தலைமை மின் ஆய்வாளர் | உறுப்பினர் |
| (l) | கொதிகலன்கள் இயக்குநர் | உறுப்பினர் |
| (m) | தீ மற்றும் மீட்புப் பணிகள் இயக்குநர் | உறுப்பினர் |
| (n) | இயக்குநர், வழிகாட்டுக் கழக நிறுவனம் | உறுப்பினர் செயலர் |

**(2)** மாநில அளவிலான அதிகார அமைப்பு, தலைமையாளரால் தீர்மானிக்கப்படக்கூடிய நேரத்திலும் அத்தகைய இடங்களிலும் கூடுதல் வேண்டும்; மற்றும் தன் அலுவல்களை நடத்துவதில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறையைப் பின்பற்றுதல் வேண்டும்.

**(3)** மாநில அளவிலான அதிகார அமைப்பின் உறுப்பினர் ஒருவர், கூட்டத்திற்கு தானே நேரடியாக வருகை தருதல் வேண்டும் மற்றும் அவர் கூட்டத்திற்கு வர இயலாத நேர்வில், அந்தக் கூட்டத்தில் உரிய முடிவினை எடுப்பதற்கு எழுத்து வடிவில் அதிகாரமளித்து, அக்கூட்டத்திற்கு வருகை புரிவதற்கு தனது துறையைச் சார்ந்த முதுநிலை அலுவலர் ஒருவரை அவருக்குப் பதிலாக அனுப்பலாம்.

**4. (1)** ஒரு பெரும் தொழில் அமைப்புத் திட்டத்தை நிறுவ ஏற்பாடு செய்வதற்கு விரும்புகிற தொழில் முனைவர் ஒவ்வொருவரும், வகுத்துரைக்கப்படும் கட்டணத்துடன் வகுத்துரைக்கப்படும் படிவங்களில் இதன்பொருட்டு அனைத்து வகையிலும் நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றை பின் வருவனவற்றிற்காக மாநில அளவிலான அதிகார அமைப்புக்கு செய்தல் வேண்டும்: — தொழில் அமைப்புத் திட்டங்களுக்கு தடை நீக்குவதற்கான நடைமுறை.

தமிழ்நாடு சட்டம் 58/1961. (i) **1961** ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பை நிருணயித்தல்) சட்டத்தின்படியான அனுமதி;

தமிழ்நாடு சட்டம் 35/1972. (ii) **1971** ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊரமைப்புச் சட்டத்தின்படி நிலப் பயன்பாட்டை மாற்றி வகைப்படுத்துதல் மற்றும் அனுமதி;

(iii) உள்ளாட்சி அதிகார அமைப்புகளால் மனையிட வரைபடம், கட்டட வரைபடம் ஆகியவற்றுக்கு அளிக்கப்படும் ஏற்பிசைவு;

(iv) **1950** ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளின்படி தொழிற்சாலைக்கான அனுமதி ஏற்பிசைவு, உரிமம் அளித்தல், பதிவு செய்தல் ஆகியவை;

(v) **1956** ஆம் ஆண்டு இந்திய மின்சார விதிகளின்படியான ஏற்பிசைவு;

மையச் சட்டம் 5/1923. (vi) **1923** ஆம் ஆண்டு இந்திய கொதிகலன்கள் சட்டத்தின்படி பதிவு செய்தல்;

(vii) தீ மற்றும் மீட்புப் பணிகள் இயக்குநரிடமிருந்து பெறப்படும் மறுப்பின்மைச் சான்றிதழ் வழங்கப்படுதல்;

**(2)** அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்டதன் பேரில், அத்தகைய விண்ணப்பமானது **10** ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கால வரம்பிற்குள்ளாக ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு, தொடர்புடைய தகுதிவாய்ந்த அதிகார அமைப்புகளுக்கு வகுத்துரைக்கப்படும் கால வரம்பிற்குள்ளாக மேலனுப்பப்படுதல் வேண்டும்.

**(3)** தொடர்புடைய தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது, **10** ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கால வரம்பிற்குள்ளாக, ஆணை எவற்றையும் பிறப்பிக்கவில்லையானால், அல்லது அந்த விண்ணப்பத்தை தள்ளுபடி செய்யுமானால் அல்லது மாநில அளவிலான அதிகார அமைப்பு தேவையற்றது எனக் கருதுகிற மேலுமான தகவலை விண்ணப்பதாரரிடமிருந்து கோரினால் மாநில அளவிலான அதிகார அமைப்பு, பின்வரும் பொருட்பாடுகளைப் பொறுத்து தானே அந்த விண்ணப்பத்தை பரிசீலனை செய்து, சட்டத்திற்கிணங்கிய வகையில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கால அளவிற்குள்ளாக ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

தமிழ்நாடு சட்டம் 58/1961. (a) **1961** ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டத்தின்படியான அனுமதி;

தமிழ்நாடு சட்டம் 35/1972. (b) **1971** ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின்படி நிலப் பயன்பாட்டை மாற்றி வகைப்படுத்த மற்றும் அனுமதி;

(c) உள்ளாட்சி அதிகார அமைப்புகளால் மனையிட வரைபடத்திற்கும் கட்டட திட்ட வரைபடத்திற்கும் ஏற்பிசைவளிக்கப்படுதல்

**விளக்கம்:**

இந்தக் கூறின் நோக்கத்திற்காக, தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு என்றால் 10ஆம் பிரிவில் சுட்டப்பட்ட மேல்முறையீட்டு அதிகார அமைப்பு எனப் பொருள்படும்.

(d) 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளின்படி தொழிற்சாலைகளுக்கான திட்ட வரைபடத்திற்கான ஏற்பிசைவு, உரிமம் வழங்குதல் மற்றும் பதிவு செய்தல்.

மாநில அளவிலான அதிகார அமைப்பின் அதிகாரங்களும் அலுவற் பணிகளும்.

**5.** மாநில அளவிலான அதிகார அமைப்பானது பின்வரும் அதிகாரங்களைச் செலுத்துதலும் பின்வரும் அலுவற்பணிகளை ஆற்றுதலும் வேண்டும்:—

(a) மாநிலத்திலுள்ள தொழில் அமைப்புத் திட்டங்களின் விரைவானதும் முறையானதுமான அமைப்பு, வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றை ஊக்குவித்தல் மற்றும் அதற்கு உதவுதல் ;

(b) பல்வேறு அதிகார அமைப்புகள் அல்லது துறைகளிடமிருந்து கோரப்படும் தடையில்லை என்பதான அனுமதி வழங்க ஒரு முனைத் தொடர்பாகச் செயல்படுதல் ;

(c) தொடர்புடைய அதிகார அமைப்புக்களால் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்படுவதைக் கண்காணித்தல்;

(d) முதலீட்டு மேம்பாட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்;

(e) தொழில் முன்னேற்றத்தைப் பொறுத்த வரையிலான கொள்கை உருவாக்கத்தில் தேவையான உதவி செய்தல்;

(f) மாநிலத்தில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் உதவிபுரிதல்;

(g) தொழில்முனைவோர்களுக்கு ஒருங்கிணைந்த விண்ணப்பப் படிவத்தை வழங்குதல், அவர்களிடமிருந்து படிவங்களைப் பெறுதல், வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள்ளாக தொடர்புடைய அதிகார அமைப்புகளிடமிருந்து தேவைப்படுகிற தடையில்லை என்பதான அனுமதிகளை வழங்க ஏற்பாடு செய்தல்;

(h) வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அலுவற் பணிகள் எவற்றையும் ஆற்றுதல்;

மாவட்ட அளவிலான அதிகார அமைப்பு.

**6.** **(1)** அரசானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட அளவிலான அதிகார அமைப்பு ஒன்றை அமைத்துருவாக்குதல் வேண்டும், அதாவது:—

| | |
|---|---|
| (a) மாவட்ட ஆட்சியர் | தலைமையாளர் |
| (b) நிலச் சீர்திருத்த உதவி இயக்குநர் | உறுப்பினர் |
| (c) பொருந்தக்கூடியவாறு உள்ளாட்சி திட்ட அதிகாரக் குழுமத்தின் உறுப்பினர்—செயலர், அல்லது நகர்—ஊரமைப்பு திட்ட மண்டல துணை இயக்குநர் | உறுப்பினர் |
| (d) நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர் | உறுப்பினர் |
| (e) ஊராட்சி உதவி இயக்குநர் | உறுப்பினர் |
| (f) நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு மாவட்ட மின்வாரியம் | உறுப்பினர் |
| (g) தொழிற்சாலைகளின் துணைத் தலைமை ஆய்வாளர் | உறுப்பினர் |
| (h) மின் ஆய்வாளர் | உறுப்பினர் |
| (i) கொதிகலன் உதவி இயக்குநர் | உறுப்பினர் |
| (j) மாவட்ட தீயணைப்பு அலுவலர் | உறுப்பினர் |
| (k) பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | உறுப்பினர் செயலர் |

(2) மாவட்ட அளவிலான அதிகார அமைப்பானது, தலைமையாளரால் முடிவு செய்யப்படக் கூடிய அத்தகைய நேரங்களிலும் அத்தகைய இடங்களிலும் கூடுதல் வேண்டும் மற்றும் தன் அலுவல்களை நடத்துவதில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறையைப் பின்பற்றுதல் வேண்டும்.

(3) மாவட்ட அளவிலான அதிகார அமைப்பின் உறுப்பினர் ஒருவர், கூட்டத்திற்குத்தானே நேரடியாக வருகை தருதல் வேண்டும் மற்றும் கூட்டத்திற்கு அவர் வர இயலாத நேர்வில், அந்தக் கூட்டத்தில் உரிய முடிவினை எடுப்பதற்கு எழுத்து வடிவில் அதிகாரமளித்து, அந்தக் கூட்டத்திற்கு வருகை தருவதற்காக தனது கட்டுப்பாட்டில் உள்ள முதுநிலை அலுவலர் ஒருவரை அவருக்குப் பதிலாக அனுப்பலாம்.

தொழில் அமைப்புத் திட்டங்களுக்கு தடையில்லை என்பதான அனுமதி வழங்குவதற்கான நடைமுறை.

**7.** (1) ஒரு மாவட்டத்தில் சிறு அல்லது நடுத்தர தொழில் அமைப்புத் திட்டத்தை செயல்முறையில் நிறுவ விரும்புகிற ஒவ்வொரு நபரும், வகுத்துரைக்கப்படக் கூடிய படிவங்களிலும் கட்டணத்துடனும் இதன்பொருட்டு அனைத்து வகையிலும் நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பமொன்றை 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட பொருட்பாடு குறித்து தொடர்புடைய மாவட்ட அளவிலான அதிகார அமைப்பிற்குச் செய்யலாம்

(2) அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்டதன் பேரில் அத்தகைய விண்ணப்பமானது 10 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கால வரம்பிற்குள்ளாக, ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு, தொடர்புடைய தகுதி வாய்ந்த அதிகார அமைப்புகளுக்கு வகுத்துரைக்கப்படும் கால வரம்பிற்குள்ளாக மேலனுப்பப்படுதல் வேண்டும்.

(3) தொடர்புடைய தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது, 10 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கால வரம்பிற்குள்ளாக அந்த விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்யுமானால் அல்லது ஆணைகள் எவற்றையும் பிறப்பிக்கவில்லையானால் அல்லது மாவட்ட அளவிலான அதிகார அமைப்பு தேவையற்றது எனக் கருதுகிற மேலுமான தகவலை விண்ணப்பதாரரிடமிருந்து கோரினால்,

(i) மாவட்ட அளவிலான அதிகார அமைப்பு, பின்வரும் பொருட்பாடுகளைப் பொறுத்து விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து சட்டத்திற்கிணங்கிய வகையில் ஆணைகளை வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கால அளவிற்குள்ளாக ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு அப்பொருட்பாட்டினை மாநில அளவிலான அதிகார அமைப்பிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்:—

தமிழ்நாடு சட்டம் 58/1961.

(a) 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டப்படியான அனுமதி.

தமிழ்நாடு சட்டம் 35/1972.

(b) 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் – ஊரமைப்புச் சட்டத்தின்படி நிலப் பயன்பாட்டை மாற்றி வகைப்படுத்துதல் மற்றும் அனுமதி.

(c) 1950ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளின்படி தொழிற்சாலைகளுக்கான அனுமதி, ஏற்பிசைவு, உரிமம் வழங்குதல் மற்றும் பதிவு செய்தல்.

(ii) மாவட்ட அளவிலான அதிகார அமைப்பு மனையிட வரைப்படத்தையும், கட்டிட வரைப்படத்தையும் பொறுத்த அளவில், தானே சட்டத்திற்கு இணங்கிய வகையில் ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

**விளக்கம்**:

இந்தக் கூறின் நோக்கத்திற்காக, தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு என்றால் 10ஆம் பிரிவில் சுட்டப்பட்ட மேல்முறையீட்டு அதிகார அமைப்பு எனப் பொருள்படும்.

மாவட்ட அளவிலான அதிகார அமைப்பின் அதிகாரங்களும் அலுவற் பணிகளும்

**8.** (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, மாவட்ட அளவிலான அதிகார அமைப்பானது, பின்வரும் அதிகாரங்களைச் செலுத்துதலும், அலுவற்பணிகளைப் புரிதலும் வேண்டும்.

(a) மாவட்டத்திலுள்ள தொழில் அமைப்புத் திட்டங்களில் விரைவானதும் முறையானதுமான அமைப்பு, வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றை ஊக்குவித்தல் மற்றும் அதற்கு உதவுதல் ;

(b) பல்வேறு அதிகார அமைப்புகள் அல்லது துறைகளிடமிருந்து கோரப்படும் தடையில்லை என்பதான அனுமதி வழங்க ஒருமுனைத் தொடர்பாகச் செயல்படுதல்;

(c) தொடர்புடைய அதிகார அமைப்புகளால் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்படுவதைக் கண்காணித்தல் ;

(d) மாவட்டத்தில் முதலீட்டு மேம்பாட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் ;

(e) மாவட்டத்தில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டுதல் உதவி புரிதல்;

(f) தொழில் முனைவோர்களுக்கு ஒன்றினைத்த விண்ணப்பப் படிவத்தை ஒன்று வழங்குதல்; அவர்களிடமிருந்து படிவங்களைப் பெறுதல்; வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள்ளாக தொடர்புடைய அதிகார அமைப்புகளிடமிருந்து தேவைப்படுகிற, தடையில்லை என்பதான அனுமதிகளை வழங்க ஏற்பாடு செய்தல் ;

(g) வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அலுவலற்பணிகள் எவற்றையும் ஆற்றுதல்.

ஒருங்கிணைந்த விண்ணப்பப் படிவம்.

**9.** மாவட்டச் சட்டங்கள் மற்றும் அதன்படி உருவாக்கப்பட்ட விதிகள் எதனின்படியும் வகுத்துரைக்கப்பட்ட படிவங்களுக்குப் பதிலாக, மாநில அளவிலான அதிகார அமைப்பிற்கோ அல்லது மாவட்ட அளவிலான அதிகார அமைப்பிற்கோ பணிந்தளிக்கப்பட்ட தொழில் முனைவரின் திட்டங்கள் அவர்தம் பயன்பாட்டிற்காக ஒன்றினைத்த விண்ணப்பப் படிவம் ஒன்றினை அரசு வகுத்துரைக்கலாம்.

தடையில்லையென அனுமதி வழங்குவதற்கான காலவரம்பு.

**10.** (1) அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும் தொடர்புடைய அதிகார அமைப்புகளால் தடையில்லையென அனுமதி வழங்குவதற்கான கால வரம்பானது, பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

அதாவது;,–

| *வரிசை எண்.* | *தடையில்லையென அனுமதி அளித்தல்.* | *கால வரம்பு.* | |
|---|---|---|---|
| 1. | 1961–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டத்தின்படியான அனுமதி .. | 60 நாட்கள் | தமிழ்நாடு சட்டம் 58/1961. |
| 2. | 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊரமைப்பு சட்டத்தின்படி நிலத்தின் பயன்பாட்டினை மாற்றி வகைப்படுத்துவதற்கு .. | 45 நாட்கள் | தமிழ்நாடு சட்டம் 35/1972. |
| 3. | மனையிட வரைபடத்திற்கும், கட்டிட வரைப்படத்திற்கும் ஏற்பிசைவு அளிக்கப்படுதல் :— | | |
| | (a) உள்ளாட்சி அதிகார அமைப்புகளால்,– | | |
| | (i) பல அடுக்குமாடி கட்டிடத்தைப் பொறுத்த அளவில் .. | 45 நாட்கள் | |
| | (ii) பிற கட்டிடங்களைப் பொறுத்த அளவில் .. | 30 நாட்கள் | |
| | (b) மேல்முறையீட்டு அதிகார அமைப்புகளால்,– | | |
| | (i) பல அடுக்குமாடி கட்டித்தைப் பொறுத்த அளவில் .. | 30 நாட்கள் | |
| | (ii) பிற கட்டிடங்களைப் பொறுத்த அளவில் .. | 30 நாட்கள் | |
| 4. | 1950ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளின்படி தொழிற்சாலைக்கான அனுமதி, ஏற்பிசைவு, உரிமம் அளித்தல் மற்றும் பதிவு செய்தல் .. | 90 நாட்கள் | |
| 5. | 1956–ஆம் ஆண்டு இந்திய மின்சார விதிகளின்படியான ஏற்பிசைவு .. | 30 நாட்கள் | |
| 6. | 1923–ஆம் ஆண்டு இந்தியக் கொதிகலன்கள் சட்டத்தின்படி பதிவு செய்தல் .. | 30 நாட்கள் | மையச்சட்டம் 5/1923. |
| 7. | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையின் இயக்குநரிடமிருந்து மறுப்பின்மைச் சான்றிதழ் .. | 30 நாட்கள் | |

**விளக்கம்:—**

கால வரையறையானது, தொடர்புடைய தகுதிவாய்ந்த அதிகார அமைப்புகளால் விண்ணப்பத்தைப் பெறப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

**11.** தொழில் முனைவோர் ஒவ்வொருவரும், மாநில அளவிலான அதிகார அமைப்பிற்கு அல்லது நேர்விற்கேற்ப மாவட்ட அளவிலான அதிகார அமைப்பிற்கு முழுமையாக நிறைவு செய்வதற்காக ஒன்றினைத்த விண்ணப்பத்தை உரியவாறு பணிந்தனுப்பப்படுகின்ற நேரத்தில் தொடர்புடைய சட்டங்களின் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கு தான் இணங்கி நடப்பதாக உறுதிமொழி கொடுக்கிற வகையிலான "**தற்சான்றிதழ்**" ஒன்றைக் கொடுத்தல் வேண்டும். அந்த உறுதிமொழியானது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்தில் கொடுக்கப்படுதல் வேண்டும். **தற்சான்றிதழ்**

(2) தேவையான, தடையில்லை என்பதான அனுமதியை வழங்கும் நோக்கத்திற்காக தொழில் முனைவோரால் கொடுக்கப்பட்ட தற்சான்றிதழானது தொடர்புடைய தகுதி வாய்ந்த அதிகார அமைப்புகளால் ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**12.** (1) அதிகார அமைப்பு ஒவ்வொன்றினாலும் ஒரு நிதியமானது நிறுவப்படுதல் வேண்டும் மற்றும் அதில்,— நிதியத்தினை நிறுவுதல் மற்றும் அதன் பொருந்துகை.

(a) மானியங்கள், கடன்கள், முன்பணங்கள் அல்லது பிறவாறான முறையில் அரசிடமிருந்து அதிகார அமைப்பால் பெறப்பட்ட பணம் எதுவும்,

(b) இந்தச் சட்டத்தின்படியோ அல்லது தொழிற்சாலை திட்டத்திற்குப் பொருந்துவதற்கென செய்யப்பட்ட சட்டத்தின் வகைமுறை எதனின்படியோ அதிகார அமைப்பால் பெறப்பட்ட கட்டணங்கள் அனைத்தும் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்நிதியமானது, அதிகார அமைப்பால் செய்யப்பட்ட அல்லது அந்த அதிகார அமைப்பினை நிருவாகம் செய்வதில் ஏற்பட்ட செலவினங்களுக்கும் பயன்படுத்தப்படுதல் வேண்டும். பிற நோக்கங்களுக்காக அன்று.

**13.** (1) அதிகார அமைப்பானது, சரியான கணக்குகளையும் பிற தொடர்பான பதிவேடுகளையும் பேணி வருதல் வேண்டும்; மற்றும் வகுத்துரைக்கக்கூடிய அத்தகைய படிவத்திலான ஐந்தொகைக் குறிப்பு உள்ளடங்கலான ஆண்டு கணக்கு விவரவுரை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும். கணக்குகளும் தணிக்கையும்.

(2) அதிகார அமைப்பின் கணக்குகள் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய அதிகார அமைப்பினால் தணிக்கைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் படி ஒன்று அறிக்கையுடன் இணைக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

**14.** அதிகார அமைப்பானது ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆண்டின்போதான அதன் செயற்பாடுகள் குறித்த அறிக்கை ஒன்றினைத் தயாரித்தல் வேண்டும்; மற்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அத்தகைய படிவத்தில் அரசுக்கு அந்த அறிக்கையைப் பணிந்தனுப்புதல் வேண்டும். ஆண்டு அறிக்கை.

**15.** அதிகார அமைப்பானது, அப்போதைக்கப்போது அரசு கோரக்கூடிய அத்தகைய அறிக்கைகளையும் விவர அறிக்கைகளையும் பிற தகவல்களையும் அரசுக்கு வழங்குதல் வேண்டும். விவர அறிக்கைகள்.

**16.** (1) அரசு அப்போதைக்கப்போது இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான நோக்கத்திற்குத் தேவையானது அல்லது உகந்ததானது எனத் தாம் கருதும் அத்தகைய பொதுவான அல்லது தனியான பணிப்புரைகளை அதிகார அமைப்புக்கு வழங்கலாம்; மற்றும் அந்த அதிகார அமைப்பானது அத்தகைய பணிப்புரைகளை பின்பற்றுவதற்கும் அதன்படி செயற்படுத்துவதற்குமான கடமைப் பொறுப்பினைக் கொண்டதாகும். அரசினால் கட்டுப்பாடு செய்யப்படுதல்.

(2) அரசு, எந்த நேரத்திலும் அது தானாகவோ அல்லது இதன்பொருட்டு அதற்கு செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரிலோ, பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது வழங்கப்பட்ட பணிப்புரை எதனின் சட்ட முறையை அல்லது ஒழுங்கு முறைமை குறித்து தானே மனநிறைவடையும் நோக்கத்திற்காக, அதிகார அமைப்பால் முடிவு செய்யப்பட்ட வழக்குப் பொருட்பாடு எதனின் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனின் பதிவுருக்களை கோரிப் பெறலாம்; மற்றும் அது தொடர்பாக, தான் பொருத்தமெனக் கருதக்கூடிய அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம். அல்லது அத்தகைய பணிப்புரையை வழங்கலாம்:

**வரம்புரை:**

ஆனால், அரசானது, நபர் எவருக்கும் அவர்தம் தரப்பினைக் கேட்பதற்கான நியாயமான வாய்ப்பு ஒன்றைக் கொடுக்காமல் அத்தகைய நபருக்குக் குந்தகமான ஆணையொன்றைப் பிறப்பித்தல் கூடாது.

(3) இந்தப் பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களை நிறைவேற்றுவதில் அரசினால் செய்யப்பட்ட ஆணை ஒவ்வொன்றும் இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

அதிகார அமைப்பின் உறுப்பினர்கள், அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோர் பொது ஊழியர்களாக இருப்பர் என்பது.

**17.** அதிகார அமைப்பின் தலைமையாளர்கள், உறுப்பினர்கள், அலுவலர்கள், பிற பணியாளர்கள், ஆகியோர், இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் வரைமுறைகளில் ஏதொன்றையும் ஒட்டி செயற்படும்போது அல்லது செயற்படுவதாகப் புலப்படும்போது, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 21–ஆம் பிரிவின் பொருள்படி பொது ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

மையச் சட்டம் XLV / 1860.

இந்தச் சட்டம் பிற சட்டங்களுக்கு மேலோங்கி நிற்றல்.

**18.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற மாநிலச் சட்டம் எதிலும் முரணாக என்ன அடங்கியிருந்தபோதிலும் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பிற மாநிலச் சட்டங்கள் பொருந்துதல்.

**19.** அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, மாநிலச் சட்டத்தின் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகள் எவற்றின் வகைமுறைகளில் ஏதொன்றும் அறிவிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய அளவுக்கும், அத்தகைய மாற்றமைவுகள், கூடுதல்கள் வரையறைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டும் தொழில் அமைப்புத் திட்டங்களுக்குப் பொருந்துதல் வேண்டும் எனப் பணிக்கலாம்.

திறந்த வெளியிடத்தை ஒதுக்கீடு செய்தல்.

**20.** 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊரமைப்புச் சட்டத்தின் 28–ஆம் பிரிவின்படி ஏற்பிசைவளிக்கப்பட்ட வட்டாரத் திட்டம், பெருந்திட்டம் அல்லது புதிய நகர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றில் என்ன அடங்கியிருந்தபோதிலும், வட்டாரத் திட்டம், பெருந்திட்டம் அல்லது புதிய நகர் மேம்பாட்டுத் திட்டத்தின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட திறந்த வெளியிடமானது, வகுத்துரைக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, தொழில் முனைவோர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வருதல் வேண்டும்; மற்றும் அவர்களால் பராமரிக்கப்படுதல் வேண்டும்:

தமிழ்நாடு சட்டம் 35/1972

**வரம்புரை:**

ஆனால், நிதி சார்ந்த சேவைகள், மருத்துவமனை அல்லது சுற்றுலா தொடர்பான தொழில் அமைப்புத் திட்டங்களை செயல்முறையில் நிறுவ விரும்புகிற தொழில் முனைவோர்களுக்கு இந்தப் பிரிவு பொருந்தாது.

தண்டனை.

**21.** 11–ஆம் பிரிவின்படி கொடுக்கப்பட்டதன் தற்சான்றிதழில் அடங்கிய உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு தவறுகிற தொழில் முனைவர் எவரும், குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டதன்பேரில், முதல் குற்றச் செயல்களுக்காக ஒரு இலட்ச ரூபாய் வரை நீட்டிக்கக்கூடிய பணத் தண்டனையுடனும் இரண்டாவதாக அல்லது அடுத்து வருகிற குற்றச் செயலுக்காக இரண்டு இலட்ச ரூபாய் வரை நீட்டிக்கக்கூடிய பணத்தண்டனை விதித்தும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

நிறுமங்களால் செய்யப்படும் குற்றச்செயல்கள்.

22. (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் எதற்குமெதிரான அல்லது குற்றச் செயலொன்று நிறுமமொன்றால் செய்யப்பட்டிருக்குமிடத்து, அக்குற்றச் செயல் செய்யப்பட்ட காலத்தில் அந்நிறுமத்தின் அலுவலை நடத்தும் பொருட்டு அந்நிறுமத்தைத் தம் பொறுப்பில் கொண்டிருந்த நபரும் அதற்குப் பொறுப்பாயிருந்த நபரும் அவர்களோடுகூட அந்நிறுமமும் அக்குற்றச் செயலைச் செய்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதோடு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படியே தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

**வரம்புரை:**

ஆனால், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அக்குற்றச் செயலானது தமக்குத் தெரியாமலேயே செய்யப்பட்டிருக்கின்றது என்றோ அல்லது அக்குற்றச் செயல் செய்யப்படுவதைத் தடுப்பதற்கான உரிய முயற்சி அனைத்தையும் தாம் மேற்கொண்டார் என்றோ அத்தகைய நபர் எவரும் மெய்ப்பிப்பாராயின் அவரைத் தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின்படி குற்றச் செயல் எதுவும் நிறுமமொன்றால் செய்யப்பட்டிருந்து அக்குற்றச் செயலானது, அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் இசைவுடனோ மறைமுக ஆதரவுடனோ செய்யப்பட்டிருக்கின்றது அல்லது அவர்பாலுள்ள கவனக் குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கின்றது என்று மெய்ப்பிக்கப்படுமிடத்து, அத்தகைய இயக்குநர், மேலாளர், அல்லது பிற அலுவலர் அக்குற்றச் செயலைச் செய்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதோடு, மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படியே அவர் தண்டிக்கப்படுவதற்கு உள்ளதாலும் வேண்டும்.

**விளக்கம் :**

இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக,–

(a) 'இயக்குநர்' என்றால்,—

(i) ஒரு நிருவாகம் தொடர்பாக நிறுவகத்திலுள்ள கூட்டாளியொருவர் என்றும்,

(ii) ஒரு சங்கம் ஒரு பொறுப்புக் கட்டளை அல்லது பிற தனி நபர்களின் குழு தொடர்பாக, அச்சங்கத்தின் பொறுப்புக் கட்டளையின் அல்லது பிற குழுவின் விதிகளின்படி எந்த நபரிடம் அச்சங்கம் அல்லது பொறுப்புக்கட்டளை அல்லது நேர்விற்கேற்ப பிற குழு விவகாரங்களின் மேலாண்மை ஒப்படைக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபர் என்றும் பொருள்படும்.

அதிகார அமைப்பின் அலுவலர்களும் பணியாளர்களும்.

23. அரசானது, மாநில அளவிலான அதிகார அமைப்பிற்கும் மாவட்ட அளவிலான அதிகார அமைப்புகளுக்கும், இந்தச் சட்டத்தின்படி அவை திறமையான முறையில் தமது பணிகளை ஆற்றுவதற்கு தேவையானதாக இருக்கக்கூடிய அத்தகைய அலுவலர்களையும் பணியாளர்களையும் வழங்குதல் வேண்டும்; இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு மற்றும் பிற பணியாளர்களுக்கு வழங்கத்தக்க சம்பளங்களும் பிறபடிகளும் மற்றும் அவர்களின் பணி பற்றிய வரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

24. இந்தச் சட்டத்தின்படியோ அல்லது இதன்படி செய்யப்பட்ட விதிகளின்படியோ, நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக்கருதப்பட்ட எதற்காகவும் இந்தச் சட்டத்தின்படியோ அதன்படியோ அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் அல்லது செயற் பணிகளை ஆற்றுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்பு அல்லது அதன் உறுப்பினர்கள், அரசு அல்லது அலுவலர் அல்லது நபர் எவருக்குமோ, எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எவையும் தொடுக்கப்படுதல் கூடாது.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

25. (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை அனைத்தையுமோ அல்லது அவற்றுள் ஏதொன்றையுமோ நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும் அல்லது பிறப்பிக்கப்படும் அறிவிக்கை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரோ அதை அடுத்து வரும் கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப்

பேரவையானது செய்யுமாயின் அல்லது அந்த விதியோ அல்லது அறிவிக்கையோ செய்யப்படவோ பிறப்பிக்கப்படவோ கூடாது என்று அப்பேரவை முடிவு செய்யுமாயின், அதன் பின்பு அந்த விதியோ அல்லது அறிவிக்கையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட படிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அவ்வாறு மாறுதல் செய்தது அல்லது வடிவம் நீக்கம் எதுவும், அந்த விதியின்படியோ அல்லது அறிவிக்கையின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

ஒழுங்குமுறை விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**26.** அதிகார அமைப்பானது இந்தச் சட்டத்தின்படியான தனது அலுவல்களை ஆற்றிவருதற்கு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கும் முரணாக இல்லாமல், அரசின் முன் ஒப்பளிப்புடன் அறிவிக்கையின் மூலம் ஒழுங்குமுறை விதிகளைச் செய்யலாம்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**27.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செயல் வடிவம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், அரசு அறிவிக்கையின் வாயிலாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில் அந்த இடர்ப்பாட்டினை நீக்குவதற்குத் தேவையானது அல்லது உகந்தது எனத் தனக்குத் தோன்றுகின்ற அத்தகைய வகை முறை எதனையும் செய்யலாம்.

**வரம்புரை:**

ஆனால், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து மூன்றாண்டுகள் முடிவடைந்த பின்னர் அத்தகைய அறிவிக்கை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

37–A எனும் பிரிவுக்கான திருத்தம்.

**தமிழ்நாடு சட்டம் 58/1961.**

**28.** 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டத்தின் 37–A எனும் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்கான விளக்கத்தில், இறுதியில் பின்வருவன சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:—"

"அல்லது 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நடைமுறையை எளிதாக்குதல் சட்டத்தின்படியான தொழில் அமைப்பு திட்டத்தை செயல்முறையில் நிறுவுவதற்கு, மாநில அளவிலான அதிகார அமைப்பு அல்லது மாவட்ட அளவிலான அதிகார அமைப்பிற்கு விண்ணப்பித்துள்ள"

## நோக்க—காரண விளக்கவுரை

தொழில் மேம்பாட்டினை ஊக்கப்படுத்துவதற்கும் புதிய முதலீடுகளை செய்வதை எளிதாக்குவதற்கும் நடைமுறைத் தேவைப்பாடுகளை குறைப்பதன் மூலம் ஒழுங்குமுறை வரையமைப்பை எளிமைப்படுத்துவதற்கும் உழைப்பு—காலம்—பொருள்கள் வீணாவதைத் தவிர்த்து, தேவையான ஆவணங்களை வழங்குவதற்கும் வகைசெய்வதெனவும் தமிழ்நாடு மாநிலத்தில் முதலீட்டாளர்களுக்கு நட்போடு கூடிய சூழலுக்கு வகைசெய்வதெனவும் தேவையானதெனக் கருதப்படுகிறது. அதற்கிணங்கிய வகையில், பின்வரும் நோக்கங்களுக்காக, தனிப்பட்ட சட்டம் ஒன்றை இயற்றுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது:—

(i) இம்மாநிலத்தில் தொழில் அமைப்புத் திட்டங்களை செயல்முறையில் நிறுவுவதற்குத் தேவைப்படக்கூடிய, தடை இல்லை என்பதான பல்வேறு அனுமதிகளை விரைவாக வழங்கும் நோக்கத்திற்காக இரண்டு அதிகார அமைப்புகளை அமைத்துருவாக்குதல்; அவற்றில் ஒன்று மாநில அளவிலும் மற்றொன்று மாவட்ட அளவிலும் அமையும்.

(ii) அதிகார அமைப்புக்கு விண்ணப்பத்தை அனுப்புகிற நேரத்தில் தற்சான்றிதழை, தொழில் முனைவர்களே கொடுப்பதன் மூலம் பணியை எளிதாக்குதல்.

2. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

**நிதி பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவின் 23—ஆம் கூறானது, மாநில அளவிலான அதிகார அமைப்பும் மாவட்ட அளவிலான அதிகார அமைப்புகளும் இந்தச் சட்டத்தின்படி அவை திறமையான முறையில் தமது பணிகளை ஆற்றுவதற்குத் தேவையானதாக இருக்கக்கூடிய அத்தகைய அலுவலர்களையும் பணியாளர்களையும் வழங்குவதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

2. எனவே, இச்சட்டமியற்றலானது மாநிலத்தொகு நிதியத்திலிருந்து செலவு செய்வதை உள்ளடக்கியிருக்கிறது. எனினும், இந்தச் சட்டத்தை நிருவகித்து நடைமுறைப்படுத்துவது தொடர்பான செலவினத்தை இந்த நிலையில் எந்தக்கோணத்திலும் துல்லியமாக மதிப்பிட இயலாது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவில் 1 (2), 3 (2), 4, 5 (h), 6 (2), 8 (g), 9, 11 (1), 13 (1), 13 (2), 14, 20, 23, 25, 27 ஆகிய கூறுகள் விதிகளைச் செய்வதற்கும் அறிவிக்கைகளையும் ஆணைகளையும் பிறப்பிப்பதற்கும் அரசுக்கு அதிகாரமளிக்கின்றன; மற்றும் 26ஆம் கூறானது, ஒழுங்குமுறை விதிகளைச் செய்வதற்கு மாநில அளவிலான அதிகார அமைப்பிற்கும் மாவட்ட அளவிலான அதிகார அமைப்பிற்கும் அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2009**

1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன் வடிவு.

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 13/1974

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச்

சட்டத்தின் 2–ஆம் பிரிவில் (1–A)எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

" (1–A) "தரைப்பரப்பு" என்றால் (நீளத்தையும் அகலத்தையும் பெருக்கி வருகிற அளவு என்ற நிலையில்) ஊர்தியின் கட்டமைப்பிற்குள்ளாக அமைந்த மொத்தத் தரைப்பரப்பில் நூற்றுக்குப் பத்து விழுக்காடு என்ற அளவிலான நிலையான கழிவினைச் செய்ததற்கு பின்னர் எட்டப்படும் மொத்தத் தரைப்பரப்பு எனப் பொருள்படும்.

வரம்புரை:

ஆனால், நிலையான கழிவிற்குப் பின்னர் எட்டப்படும் நிகர தரைப்பரப்பின் முதல் தசம பின்னப் புள்ளிக்கு அப்பால் வரும் சதுர மீட்டர் ஒன்றின் பின்னமானது, அதற்கு அடுத்த உயரளவு தசமப் புள்ளிக்கு முழுமையாக்கப்படுதல் வேண்டும்.

(1–B) "அரசு" என்றால் மாநில அரசு எனப் பொருள்படும்;".

முதலாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்

3. முதன்மைச் சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலில், 2–ஆம் வகையில் II-ஆம் பத்திக்கு பதிலாக, பின்வரும் பத்தியானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"II சுற்றுலா ஊர்தியாக வகை செய்யப்பட்டிருந்தாலும் அல்லது அவ்வாறு வகை செய்யப்பட்டிராவிட்டாலும், ஒப்பந்த ஊர்தியாக மட்டுமே ஓட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட ஊர்திகள்,

| | |
|---|---|
| (a) (ஓட்டுநர் அல்லாத பிற) முப்பத்தைந்து நபர்களுக்கு மேற்படாமல் ஏற்றிச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற ஊர்தியாக இருக்கிற நிலையில், அவ்வூர்தியின் தரைப்பரப்பின் ஒவ்வொரு சதுர மீட்டருக்கும் | ரூ.4,900.00 |
| (b) (ஓட்டுநர் அல்லாத பிற) முப்பத்தைந்து நபர்களுக்கு மேற்பட்டவர்களை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற ஊர்தியாக இருக்கிற நிலையில், (ஓட்டுநர் அல்லாத பிற) நபர் ஒவ்வொருவருக்கும்." | ரூ.3,000.00". |

**<u>நோக்க காரண விளக்கவுரை.</u>**

1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு சட்டம் 13/1974) முதலாம் இணைப்புப்பட்டியலில் 2(II)–எனும் வகையின்படி ஒப்பந்த ஊர்திகளாக மட்டுமே ஓட்டப்படுகிற மற்றும் (ஓட்டுநர் அல்லாத பிற) ஐந்து நபர்களுக்கு மேற்பட்டவர்களை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற இயக்கூர்திகளைப் பொறுத்த அளவில், ரூ.3,000 என்பதான தொகை, ஒரு காலாண்டு வரியாக விதிக்கப்படுகிறது. ஒப்பந்த ஊர்தி ஒன்று ஏற்று இடமளிக்கப்படவேண்டிய இருக்கைகளின் எண்ணிக்கையை நிர்ணயிப்பதற்கு, 1989–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் விதிகளில் வகைமுறை ஏதும் இல்லை என்பதால், ஒப்பந்த ஊர்தியை இயக்குபவர்கள் எவ்வளவு அதிக அளவில் இருக்கைகளை அமைக்கமுடியுமோ அதைவிட குறைந்த அளவில் இருக்கைகளின் எண்ணிக்கைகளை நிர்ணயித்து, அந்த ஊர்தியானது ஏற்றிச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் என்ற அளவில் மட்டுமே வரியைச் செலுத்துகிறார்கள். இது வருவாய் இழப்பிற்கு வழி வகுக்கிறது. எனவே வரி வருவாயைக் காப்பதன் பொருட்டு, 35 நபர்களுக்கு மேற்படாமல் ஏற்றிச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட ஒப்பந்த ஊர்திகளைப் பொறுத்தளவில், தரைப்பரப்பின் அடிப்படையிலும், பிற ஒப்பந்த ஊர்திகளை பொறுத்தளவில் இருக்கைகளின் அடிப்படையிலும், வரியை விதிப்பதென அரசு முடிவு செய்துள்ளது. எனவே அரசானது, மேற்சொன்ன நோக்கத்திற்காக, மேற்சொன்ன சட்டத்தைத் திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

கே.என்.நேரு,
போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2009**

**1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்ட மன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்க கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 13/1974

20–B எனும் பிரிவிற்கான திருத்தம்.

2. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் 20–B எனும் பிரிவில் பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:–

வரம்புரை: ஆனால் 15–**A** எனும் பிரிவின் படியான உரிமம் வழங்கும்

அலுவலரின் பணிப்புரைக்கு எதிராக, மேல் முறையீடு எதுவும் உரிமம் வழங்கும் அலுவலரால் செலுத்தப்படவேண்டுமென, அவ்வாறு பணிக்கப்பட்டவறான வரியின் நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு அளவிற்குச் செலுத்தியதற்கான நிறைவான சான்றினை உடன் அனுப்பினாலன்றி ஏற்கப்படுதல் ஆகாது.

**நோக்ககாரண விளக்கவுரை**

தற்போது, ஒரு மேல்முறையீட்டை முன்னிடும்போது, இயக்கூர்திகளை தன் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் கொண்டுள்ள பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் அல்லது நபரால் மேற்சொன்ன சட்டத்தின் 15–A எனும் பிரிவின்படி உரிமம் வழங்கும் அலுவலரின் பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்டவாறு செலுத்தப்பட வேண்டிய வரியின் பகுதியை செலுத்தப்படுவதற்கான வகைமுறை எதுவும், 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 13 / 1974) இல்லை. எனவே, ஒரு மேல் முறையீட்டை முன்னிடும்போது 15–A எனும் பிரிவின்படி செலுத்தப்பட வேண்டியதாக பணிக்கப்பட்ட வரியில் நூற்றுக்கு ஐம்பது விழுக்காட்டினை செலுத்துவதற்கு வகை செய்வதற்காக, மேற்சொன்ன சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதெனக் கருதப்படுகிறது. அதற்கிணங்கிய வகையில், அரசு, கருதப்படும் நோக்கத்திற்காக, மேற்சொன்ன சட்டத்தினைத் திருத்துவதென முடிவுசெய்துள்ளது.

2. இச் சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

கே.என்.நேரு,
போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2009**

## 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2009 ஆகஸ்ட் திங்கள் முதல்தேதியில் இருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 13/1974

3–B எனும் பிரிவைப் புகுத்துதல்.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின்

3–A எனும் பிரிவிற்கு பின்னர், பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:–

3–B சாலைப் பாதுகாப்பு வரி விதிப்பு:–

(1) பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, இயக்கூர்திகளைப் பதிவு செய்யும் நேரத்தில், ஆறாம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் ''சாலைபாதுகாப்பு வரி'' என அழைக்கப்படுகிற கூடுதல்வரி ஒன்றை விதித்து வசூலித்தல் வேண்டும்.

(2) (1)ஆம் உட்பிரிவின்படி விதிக்கப்பட்ட வரியானது, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு, வரியை திருப்பிச் செலுத்துதல் தொடர்பான வகைமுறைகள் நீங்கலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளும், இந்தச் சட்டத்தின்படி இயக்கூர்திகள் வரிவிதிப்பு மற்றும் வசூலிப்பு தொடர்பாக பொருந்துவது போன்று, இயன்ற வரையில் (1) ஆம் உட்பிரிவின்படி செலுத்தத்தக்க வரியை விதித்து வசூலிப்பது தொடர்பாகப் பொருந்துதல் வேண்டும்

புதிய இணைப்புப் பட்டியல் புகுத்தப்படுதல்.

3. முதன்மைச் சட்டத்தின் ஐந்தாம் இணைப்புப்பட்டியலுக்குப் பின்னர், பின்வரும் இணைப்புப் பட்டியலானது சேர்க்கப்படுதல் வேண்டும் அதாவது:–

**"ஆறாம் இணைப்புப் பட்டியல்.**

**(3–B எனும் பிரிவைக் காணவும்)**

| <u>**இயக்கூர்திகளின் வகை**</u><br>**(1)** | **வரி**<br>**ரூ.**<br>**(2)** |
|---|---|
| 1. மிதி இயக்கி | 250/– |
| 2. சிறு பளு ஊர்திகள் | 1,500/– |
| 3. பிற இயக்கூர்திகள் | 2,000/– |

2009 – 2010 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில், சாலைப் பாதுகாப்புக் கொள்கையை நிறைவேற்றும் பொருட்டும் மற்றும் சாலை விபத்துகளால் பலியானவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும், அரசானது, புதிய இயக்கூர்திகளைப் பதிவு செய்யும் நேரத்தில் அவற்றின் மீது சாலைப் பாதுகாப்பு வரியை விதிப்பதற்கு கருதுகிறது என அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்கிய வகையில் அரசு, இந்த நோக்கத்திற்காக, 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 13/1974) திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

கே.என்.நேரு,
போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2009**

**2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையில் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

1. (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2009–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 29/2006.**

**5–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

2. 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) சட்டத்தின் 5–ஆம் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

"(4) வாரியத்தின் தலைவர், அரசினைச் சார்பாற்றம் செய்வதற்காக பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கிடையேயிருந்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் வாரியத்தின் இணைத் தலைவர் ஒருவர் உறுப்பினர்களுக்கிடையேயிருந்து நியமிக்கப்படலாம்.''.

## நோக்க காரண விளக்கவுரை

தற்போது தமிழ்நாடு 2006–ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு நலன்) திட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/2006) 5–ஆம் பிரிவு, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நலவாரியத்தின் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து அரசு சார்பாக தலைவர் ஒருவரை இவ்வாரியத்திற்கு நியமிக்க வகை செய்கிறது. இவ்வாரியத்தின் உறுப்பினர்களிடையேயிருந்து இணைத் தலைவர் ஒருவரையும் அரசு வருவாய்த்துறையின் 3–6–2009 ஆம் நாளிட்ட 186–ஆம் எண் அரசாணையில் நியமித்துள்ளது. மேற்சொன்ன வாரியத்தின் இணைத் தலைவர் நியமனத்திற்கு சட்டப்படிக்கான பின்னணி அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு 2006–ஆம் ஆண்டு 29–ஆம் சட்டத்தை திருத்தியமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இச்சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவுக்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**இ. பெரியசாமி,**
*வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2009

**2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்ற பேரவையால் பின் வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:-

1. (1) இந்தச் சட்டம் 2009 –ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (நான்காம் திருத்தச்) சட்டம் 2009 என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது மாநில அரசினால் அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

6–A எனும் புதிய பிரிவை புகுத்துதல்

2. (இதன் பின்னர் முதன்மைச் சட்டம் எனக் குறிக்கப்படுவதாகுக), 2006 -ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் 6–ஆம் பிரிவிற்குப் பின்னர், பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

தமிழ்நாடு சட்டம் 32/2006.

"6–A செங்கல் தயாரிப்பாளர்கள் இணக்கமான வீதத்தில் வரி செலுத்தப்படுதல்:-

(1) இந்த சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், செங்கல் தயாரிக்கும் ஒவ்வொரு வணிகரும் 3–ஆம் பிரிவின், (2)–ம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கிணங்க வரியைச் செலுத்துவதற்கு பதிலாக, தனது விருப்புரிமையைத் தெரிவு செய்வதன் பேரில் இணக்கமான முறையில் ஒவ்வொரு ஆண்டிற்கும், ஏழாம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு செங்கல் சூளையின் உற்பத்தி அளவோடு இணைந்த ஒரே மொத்தத் தொகையை வரியாகச் செலுத்தலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் படி வரி செலுத்துவதற்கு விருப்புரிமையைத் தெரிவு செய்துள்ள வணிகர் ஒவ்வொருவரும், அந்த ஆண்டின் ஏப்ரல் திங்கள் 30ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ அல்லது நேர்விற்கேற்ப, வணிகம் தொடங்கியதிலிருந்து முப்பது நாள்களுக்குள்ளாகவோ, வரிக்கணிப்பு அதிகார அமைப்பிடம் விண்ணப்பம் செய்து கொள்ளுதல் வேண்டும்; மேலும் அந்தாண்டின் போது

திங்கள் தோறுமான தவணைகளில் முன்னதாகவே நிலுவையிலுள்ள வரியை செலுத்தி விடுதல் வேண்டும்; மற்றும் இந்த நோக்கத்திற்காக வகுத்துரைக்கப் படக்கூடிய அத்தகைய முறையிலும், அத்தகைய கால அளவுக்குள்ளாகவும் அத்தகைய வகுத்துரைக்கப் படக்கூடிய வரி விவர அறிக்கையை அவர் அளித்தல் வேண்டும்.

<u>வரம்புரை–I</u>

ஆனால், 2009–2010–ஆம் ஆண்டிற்கு (1)–ஆம் உட்பிரிவின் கீழ் விருப்புரிமையை தெரிவு செய்துள்ள வணிகர் ஒவ்வொருவரும், 2009-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (நான்காவது திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் வரிக்கணிப்பு அதிகார அமைப்பிடம் விண்ணப்பம் செய்து கொள்ளுதல் வேண்டும்.

<u>வரம்புரை–II</u>

மேலும், முதலாம் வரம்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகர்களைப் பொறுத்த அளவில், மொத்த விற்பனைத் தொகையானது (1)–ஆம் உட்பிரிவின் படி, வரி செலுத்துவதற்கு விருப்புரிமையைத் தெரிவிக்கிற தேதிக்கு முன்னர் உள்ள கால அளவின் போதான மொத்த விற்பனைத் தொகையே, அந்த ஆண்டிற்குரிய மொத்த விற்பனைத் தொகையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அந்த தேதியில் மிகையாக உள்ள உள்ளீட்டு வரிவரவானது ஏதேனும் இருப்பின் அது அரசிற்குச் சேருதல் வேண்டும்.

(3) 2–ஆம் உட்பிரிவின் கீழ் அவ்வாறு செய்யப்பட்ட விருப்பத்தெரிவானது, அந்த ஆண்டைப் பொறுத்த வரையில் இறுதியானதாகும் மற்றும் அந்த வணிகர்

தகுதியை இழக்கும் வரையில் அல்லது தனது விருப்பத்தெரிவினை எழுத்துருவில் திரும்பப் பெறும் வரையில் அது பின்னர் வருகின்ற ஆண்டுகளுக்கு தொடர்தல் வேண்டும்.

(4) இந்தப் பிரிவின் படி வரி செலுத்துகிற வணிகர் ஒருவர், வரி என்ற வகையிலோ அல்லது வரி என்பதாக புலப்படுகிற வகையிலோ வரி எதனையும் வசூலித்தல் கூடாது. மற்றும் அவரால் கொள்முதல் செய்யப்பட்ட பொருள்களின் மீது, உள்ளீட்டு வரி வரவு பெறுவதற்கு உரிமைத் தகுதியுடையவராக மாட்டார்.

(5) அவ்வாறான வணிகரிடமிருந்து சரக்குகளைக் கொள்முதல் செய்யும் வணிகர், அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட பொருள்களின் மீது உள்ளீட்டு வரி வரவு பெறுவதற்கு உரிமைத் தகுயுடையவராக மாட்டார்.

(6) ஒரு ஆண்டின் பகுதியில் செங்கல் சூளை இயங்கிய போதிலும், வணிகம் துவங்கிய பின்னர் முதன் முறையாக மொத்தத் தொகையைச் செலுத்துவதற்கு விருப்புரிமையை வணிகர் தெரிவிக்கிற போது தவிர, அந்த செங்கல் சூளைக்கு சொந்தமான மற்றும் மொத்தமாக தொகை செலுத்த விருப்புரிமையைத் தெரிவிக்கிற வணிகர் அவர் விருப்புரிமை தெரிவித்த மாதத் தொடக்கத்திலிருந்து அந்த முழு ஆண்டிற்கும் மொத்தத் தொகையையும் செலுத்துதல் வேண்டும்.

<u>விளக்கம்:-</u>

இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக “செங்கல் “தயாரிப்பாளர்” என்பவர், முதலாம் இணைப்புப் பட்டியலின் “B” பகுதியின் 22–ஆம் இனத்தின் உள் (a) அல்லது (b) இணைப்புகளின் குறித்துரைக்கப்பட்டுள்ள செங்கல் தயாரிப்பாளர் ஆவர்.

(3) முதன்மைச் சட்டத்தின் ஆறாம் இணைப்புப் பட்டியலுக்குப் பின்னர், பின்வரும் இணைப்புப்பட்டியல் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

ஏழாம் இணைப்புப் பட்டியலைப் புகுத்துதல்

"ஏழாம் இணைப்புப் பட்டியல்"
( 6–A எனும் பிரிவைக் காணவும்)
செங்கல் சூளைகளுக்கான இணக்க வரி வீதம்

| வரிசை எண் | செங்கல் சூளையின் கொள்ளளவு | ஆண்டொன்றுக்கு செலுத்தப்பட வேண்டிய வரிக்கு பதிலாக அமையும் மொத்த வரித்தொகை |
|---|---|---|
| 1. | 16 அடுக்குகள் கொண்ட செங்கல் சூளை | ரூ 90,000 |
| 2. | 16 அடுக்குகளுக்கு மேற்பட்டு ஆனால் 26 அடுக்குகளுக்கு மேற்படாத செங்கல் சூளை | ரூ 1,20,000 |
| 3. | 26 அடுக்குகளுக்கு மேலான ஆனால் 32 அடுக்குகளுக்கு மிகையாகாத செங்கல் சூளை | ரூ 1,80,000 |
| 4. | 32 அடுக்குகளுக்கு மேற்பட்ட செங்கல் சூளை | ரூ 1,80,000 அதோடு 32 அடுக்குகளுக்கு மேற்பட்டு உள்ள ஒவ்வொரு கூடுதல் அடுக்கிற்கும் ரூ 6000. |

விளக்கம்:-

ஒரு செங்கல் சூளை இரண்டு இடங்களில் சுடும் படியாக வடிவமைக்கப்பட்டால், அவ்வாறான செங்கல் சூளைக்கு சொந்தமான வணிகர் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை, மேற்குறிப்பிட்ட வரி வீதங்களின் இரட்டிப்பு மடங்காக இருத்தல் வேண்டும்.

<u>நோக்கக் காரண விளக்கவுரை</u>

2009–2010–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், செங்கல் உற்பத்தியாளர்கள் எளிதான முறையில் வரி செலுத்தும் வகையில், வணிகரின் விருப்பத் தேர்வின்பேரில் அவர்கள் அமைத்திருக்கும் செங்கற் சூளை அடுப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் வரிவிதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பிற்குச் செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 32 / 2006) தக்கவாறு திருத்துவதென அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்த சட்ட முன்வடிவு மேற்காணும் முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

சி.நா.மீ. உபயதுல்லா,
*வணிகவரித்துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**<u>சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு</u>**

இச்சட்டமுன்வடிவின், 6-A எனும் கூறில் குறித்துறைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அறிவிக்கைகளை அல்லது ஆணைகளைப் பிறப்பிப்பதற்கோ அல்லது நேர்விற்கேற்ப விதிகளைச் செய்வதற்கோ அரசிற்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரமானவை இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

சி.நா.மீ. உபயதுல்லா,
*வணிகவரித்துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2009**

<u>2006-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன் வடிவு.</u>

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

1. (1) இந்தச் சட்டம், 2009 –ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். — குறுந்தலைப்பும் தொடக்கமும்

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டத்தின், 3–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவிற்குப் பின்னர், பின்வரும் உட்பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :- — 3–ஆம் பிரிவிற்கான திருத்தம்

(தமிழ்நாடு சட்டம் 32/2006)

"(1-A) இந்த சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், 2007 –ஆம் ஆண்டு ஜனவரி 1–ஆம் நாள் முதல் 2007 – ஆம்

ஆண்டு மார்ச் 31– ஆம் நாள் வரையிலான கால அளவிற்கு (1)–ஆம் உட்பிரிவின் (a) அல்லது (b) கூறில் குறிப்பிட்டுள்ள வணிகர்களைப் பொறுத்த அளவில் இந்தச் சட்டத்தின் கீழ் வரிக்கணிப்பு செய்யும் நோக்கத்திற்காக, நீக்கம் செய்யப்பட்ட 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ், 2006–ஆம் ஆண்டு ஏப்ரல் 1–ஆம் நாள் முதல் 2006–ஆம் ஆண்டு டிசம்பர் 31–ஆம் நாள் வரையிலான மொத்த விற்பனைத் தொகையும், இந்தச் சட்டத்தின் படி 2007–ஆம் ஆண்டு ஜனவரி 1–ஆம் நாள் முதல் 2007–ஆம் ஆண்டு மார்ச் 31–ஆம் நாள் வரையிலான மொத்த விற்பனைத் தொகையும் 2006–2007 –ஆம் ஆண்டின் மொத்த விற்பனைத் தொகையாகக் கொள்ளப்படுதல் வேண்டும். அந்த ஆண்டில் மேற்சொன்ன (1)–ஆம் உட்பிரிவின் (a) அல்லது (b) கூறில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த விற்பனைத் தொகையைவிட அதிகமான மொத்த விற்பனைத் தொகை கொண்ட வணிகர்களைப் பொறுத்த அளவில்,–

தமிழ்நாடு சட்டம் 1/1959

(a) அவ்வாறான வணிகர், இந்தச் சட்டத்தின் கீழ் வரி வசூலித்திருக்கவில்லையாயின், அந்த வணிகர் இந்தச் சட்டத்தின் கீழ் வரி செலுத்தக் கடப்பாடுடையவராக மாட்டார்,

(b) அவ்வாறான வணிகர் இந்தச் சட்டத்தின் கீழ் வரியை வசூலித்திருந்தால், அந்த வணிகர் இந்தச் சட்டத்தின் கீழ் வரி செலுத்தக் கடப்பாடுடையவராவார் மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள அனைத்துப் பிரிவுகளும் அந்த வணிகருக்குப் பொருந்துதல் வேண்டும்.".

**நோக்க காரண விளக்க உரை**

2009–2010–ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2006)–ன் கீழ் 1.1.2007 முதல் 31.3.2007 வரையிலான கால அளவிற்குரிய வரிக்கணிப்பிற்காக, நீக்கம் செய்யப்பட்ட 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 1/1959), 1.4.2006 முதல் 31.12.2006 வரையிலான காலத்திற்குரிய மொத்த விற்பனைத் தொகையும், தமிழ்நாடு சட்டம் 32/2006-ன் கீழ் 1.1.2007 முதல் 31.3.2007 வரையிலான காலத்திற்குரிய மொத்த விற்பனைத் தொகையும் சேர்த்து கணக்கிட்டு 1.1.2007 முதல் 31.3.2007 வரையிலான காலத்திற்குள் வரி வசூல் செய்த வணிகர்களுக்கு மட்டும் வரிக்கணிப்பு செய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பிற்கு செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 32/2006) தக்கவாறு திருத்துவதென அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்த சட்ட முன்வடிவு மேற்காணும் முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.நா.மீ. உபயதுல்லா,**
***வணிகவரித் துறை அமைச்சர்.***

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*